**Spl.SC.No. 11/2020** Dated:. 21.11.2025

( 1 முதல் 4, 6,7 எதிரிகள் ஆஜர். 5 ம் எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 8 ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**அ.சா.1 ஜெயச்சந்திரன்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

பரமக்குடியிலிருந்து எங்கள் ஊருக்கு கிருஷ்ணாதியேட்டர் வழியாகத்தான் செல்லமுடியும் என்றால் சரிதான். பரமக்குடி கிருஷ்ணாதியேட்டர் ஸ்டாப்பிலிருந்து எங்கள் ஊருக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15,16 கி.மீ தூரம் இருக்கும். எங்கள் ஊரில் மூன்று பஸ்டாப்புகள் உள்ளன. எங்கள் ஊர் முதல் பஸ்ஸ்டாப் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் சாலையில் உள்ளது. 2 வது பஸ்ஸ்டாப் முதல் பஸ்ஸ்டாப்பிற்கு எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் தெற்கு திசையில் 350-400 மீ தொலைவில் உள்ளது. 3 வது பஸ்ஸ்டாப் 2 வது பஸ்ஸ்டாப்பிலிருநது தெற்கில் 400 மீ தொலைவில் உள்ளது. திருவரங்கத்தில் செல்லும் மெயின்ரோட்டிலிருந்து நிறைய ரோடுகள் பிரிந்து செல்கிறதுள ன்றால் சரிதான. திருவரங்கத்தில் வடக்கு குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த வடக்கு குடியிருப்பில் சுமார் 300 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். அதேபோல் தெற்கு குடியிருப்பு என உள்ளது என்றால் சரிதான். அந்த தெற்கு குடியிருப்பில் சுமார் 40 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்ததெற்கு குடியிருப்பில் பள்ளர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் வீடும் சுமார் 30 ம், கோனார் சமூகத்தை சேர்ந்தவர்கள் வீடு சுமார் 5 ம், மறவர் வகுப்பை சேர்ந்தவர்கள் 3 ம் உள்ளது என்றால் சரிதான். இரண்டு குடியிருப்பிற்கும் நடுவில் நடுக்குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். அதில் சுமார் 200 வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அந்த

நடுக்குடியிருப்பில் எல்லா வகுப்பை சேர்ந்தவர்களும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். திருவரங்கத்தில் இந்திரா நகர் என ஒரு பகுதி உள்ளது என்றால் சரிதான். இந்திரா நகரில் 30 வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். அதில் 25 வீடுகள் அருந்ததியர் வகுப்பை சேர்ந்தவர்களும் மீதி உள்ளவர்கள் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சாட்சிகள் சௌந்தரபாண்டி, கவாஸ்கர் ஆகியோர்களது வீடுகள் இந்திரா நகரில் உள்ளது என்றால் தற்போது உள்ளது. என் தம்பி இறந்த காலத்தில் தெற்குகுடியிருப்பில் இருந்தது. சாட்சி கவாஸ்கர் இந்திராநகரில் எப்போது இருந்து குடியிருந்து வருகிறார் என்றால் கடந்த 5,6 வருடங்களாக. என் வீடு தெற்கு குடியிருப்பில் உள்ளது. என் வீட்டிற்கும் சம்பவ காலத்தில் இருந்த கவாஸ்கர் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 வீடுகள் தள்ளி இருக்கும். சம்பவ காலத்திலும் கவாஸ்கர், சௌந்தரபாண்டி ஆகிய இருவரும் இந்திரா நகரில்தான் குடியிருந்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக தெற்கு குடியிருப்பில் குடியிருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் எங்கள் ஊரில் இரண்டு பிரிவுகளாக அப்போதும் இப்போதும் என் தாத்தா காலத்திலிருந்து உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த இரண்டு பிரிவுகளில் உள்ளவர்களுக்கு அடிக்கடி சண்டை வரும் என்றால் சரிதான். அந்த இரண்டு பிரிவுகளில் உள்ளவர்களுக்கும் நிறைய வழக்குகள் நடந்துள்ளது என்றால் சரிதான். ரமேஷ்குமார் மீன் வண்டியை எரித்தது சம்பந்தமாக போடப்பட்ட வழக்கில் சாட்சியாக போட்டு விசாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, விசாரிக்கப்பட்டேன். அதேபோல் கவாஸ்கரும் ஒரு சாட்சியாக விசாரிக்கப்பட்டாரா என்றால் எனக்கு தெரியாது. போது மகாராஜன் கொடுத்த புகார் வழக்கில் நான் சாட்சியாக இருந்தேனா என்றால் இல்லை. ஆடு திருடிய வழக்கில் நான் சாட்சியாக

இருந்தேனா என்றால் இல்லை. மணல் திருடிய வழக்கில் நான் சாட்சியாக இருந்தேனா என்றால் இல்லை. மணல் திருடியதாக போடப்பட்ட இரண்டு வழக்குகளும் விஏஓ மற்றும் சார்பு ஆய்வாளர் கொடுத்த புகாரின் பேரில் போடப்பட்ட வழக்குகள் என்றால் சரிதான். மணல் திருடியதாக போடப்பட்ட வழக்கிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். திருவரங்கம் பஞ்சாயத்து ரிசர்வ் பஞ்சாயத்தாக எந்த வருடம் செய்யப்பட்டது என்றால் 2019 ம் வருடம். ரிசர்வ் பஞ்சாயத்து என ஆக்கப்பட்டதற்கு முன்பு யார் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் S.I, மரியராஜ். ரிசர்வ் பஞ்சாயத்தாக ஆக்கப்பட்ட பிறகு என் அம்மா அன்னபூரணம் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு போட்டியிட்டார் என்றால் சரிதான். என் அம்மாவை எதிர்த்து கோபால் மனைவி ராமஜெயம் என்பவர் நின்றார் என்றால் சரிதான். 2017 ம் வருடம் தேர்தல் நிறுத்தப்பட்டுவிட்டது என்றால சரிதான். 2017 ம் வருடம் தேர்தலில் என் அம்மா, மாரிமுத்து மனைவி ராமலெட்சுமி, கோபால் மனைவி ராமஜெயம் ஆகியோர்கள் போட்டியிட்டார்கள். மூவரும் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2019 ம் வருடம் நடத்தப்பட்ட தேர்தலில் என் அம்மா ஜெயித்துவிட்டார் என்றால் சரிதான். ராமஜெயமும், ராமலெட்சுமியும் தோற்றுவிட்டார்கள். 2019 ம் வருடம் நடந்த தேர்தல் எந்த மாதத்தில் நடைபெற்றது என்றால் டிசம்பர் மாதத்தில் தேர்தல் முடிவு அறிவித்துவிட்டார்கள். 06.01.2020 முதல் என் அம்மா பஞ்சாயத்து தலைவராக பணியாற்றினார். 2019 ம் வருடம் நடந்த தேர்தலில் ரிசர்வ் மற்றும் பெண்களுக்கு என ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் வீட்டை ஒட்டி தென்புறம் வயல்கள் உள்ளன என்றால் சரிதான். எங்கள் வீட்டை ஒட்டி தென்புறம் பாண்டியம்மாள் நிலம் உள்ளது என்றால் சரிதான். பாண்டியம்மாள் நிலத்தில் போர் போட்டு அது தூறின நிலையில்

உள்ளது என்றால் சரியல்ல. என் மாமா ஆனந்தம் நிலத்தில் போர் போட்டு மோட்டார் ரூம் உள்ளதா என்றால் இல்லை. கல்தூண்கள் மட்டுமே அமைத்து மோட்டாருக்குரிய சுவிட்ச் பாக்ஸ் உள்ளது. 28.02.2020ம் தேதி இரவு பாண்டியம்மாள் மிளகாய் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த மிளகாய் தோட்டம் எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் ஒன்றரை ஏக்கர். அந்த தோட்டத்தில் எத்தனை மணியிலிருந்து தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார்கள் என்றால் பகலில் இருந்தே பாய்ச்சி கொண்டிருந்தார்கள். என்னால் சரியான நேரம் சொல்லமுடியாது. மிளகாய் தோட்டத்திற்கு ஒரு பட்டம் உள்ளது என்றால் சரிதான். அப்போது போடப்பட்டிருந்த மிளகாய் எந்த பட்டம், அது எத்தனை மாத பயிர் என்றால் சரியாக ஞாபகமில்லை. அந்த மிளகாய் தோட்டத்தில்தான் என் மாமா சௌந்தரபாண்டி, அண்ணன் ரவிக்குமார், அண்ணன் பாண்டியராஜன், தம்பி பொன்னிவளவன் ஆகியோர் தண்ணீர் பாய்ச்சி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அப்படி தண்ணீர் பாய்ச்சி கொண்டிருக்கும்போதுதான் என் தம்பி பொன்னிவளவன் போர்வை, டார்ச்லைட் எடுத்துக்கொண்டு சாப்பிட்டுவிட்டு வருவதாக எங்கள் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான். என் தம்பி பொன்னிவளவன் வீட்டிற்கு சாப்பிடுவதற்கு எத்தனை மணிக்கு வந்தார் என்றால் இரவு 9–9.30 மணியளவில் சாப்பிட்டு கொண்டிருந்தான். என் தம்பி சாப்பிட்டுவிட்டு போர்வை, டார்ச்லைட்டை எடுத்துக்கொண்டு வீட்டிலிருந்து கிளம்பும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் இரவு 9.45 மணி இருக்கும். என் தம்பி சென்றதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்திற்கு RC Book உள்ளதா என்றால் இருக்கும். வீட்டில் கேட்க வேண்டும். அந்த இருசக்கர வாகனத்திற்கு RC Book யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. என் அம்மா பெயரில் இருந்திருக்கலாம் சரியாக

நினைவில்லை. அந்த இருசக்கர வாகனம் எப்போது வாங்கப்பட்டது என்றால் தெரியாது. அந்த இருசக்கர வாகனம் என் தம்பிக்கு சொந்தமான வண்டியா என்றால் இல்லை. என்னுடைய புகாரில் என் தம்பி வீட்டிலிருந்து கிளம்பி சென்ற இருசக்கர வாகனம் என் தம்பிக்கு சொந்தமானது என சொல்லவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் சென்றதாக சொல்லியுள்ளேன். கவாஸ்கர் எங்கள் வீட்டிற்கு வந்து தகவல் சொன்னபோது மணி எத்தனை இருக்கும் என்றால் இரவு 10.40–10.45 மணி இருக்கும். உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து என்னை விசாரித்தார்கள் என்றால் 29.02.2020ம் தேதி அதிகாலை 5.00 மணிக்கு நான் புகார் கொடுக்கும்போது விசாரித்தார்கள். நான் சொன்னதை எழுதிக்கொள்ளவில்லை. கேட்டுக்கொண்டார்கள். நான் கொடுத்த புகார் எந்த தேதியில், எத்தனை மணிக்கு எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் 29.02.2020ம் தேதி அதிகாலை 4.40–4.45 மணியளவில் கீழத்தூவல் காவல்நிலையத்தில் வைத்து எழுதினேன். அந்த புகாரை நானே கைப்பட எழுதி கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு போலிசார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் 29.02.2020ம் தேதி காலை 6.30 மணியளவில் என் தம்பி இறந்துகிடந்த இடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள். என் தம்பி இறந்துகிடந்த இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு எதில் எத்தனைமணிக்கு கிளம்பி சென்றேன் என்றால் இரண்டு பைக்கில் நான்கு நபர்கள் 3.30–4.00 மணியளவில் கிளம்பி சென்றோம். கவாஸ்கர் சொல்லி இரவு 10.45 மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்றதுமுதல் காலை 3.30–

4.00 மணியளவில் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு கிளம்பும் வரை சம்பவ இடத்தில்தான் இருந்தேனா என்றால் ஆமாம். என் தம்பி செல்போன் பயன்படுத்தி வந்தாரா என்றால் இல்லை. நான் செல்போன் பயன்படுத்தி வந்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு செல்லும் வரை சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. என் தம்பி என் மாமா ஆனந்தம் போட்டிருந்த போர்வெல் கிணற்றில் எவ்வளவு தூரத்தில் எந்த திசையில் இறந்துகிடந்தான் என்றால் தெற்கு பக்கம் 100–110 மீ தூரம் இருக்கும். அலங்கானூர் திருவரங்கம் தெற்குகுடியிருப்பு ரோட்டிலிருந்து எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் என் மாமா ஆனந்தம் போட்டுள்ள போர் உள்ளது என்றால் கிழக்கு திசையில் 100 மீ தொலைவில் உள்ளது. என் மாமா ஆனந்தம் இடத்தில் நான் சொல்வதுபோல் போர்வெல் கிடையாது என்றும் நிலங்களும் கிடையாது, எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்களுக்கும் நிலங்கள் கிடையாது என்றும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கவாஸ்கர் என் தம்பிக்கு பின்னந் தலையில் இரண்டு வெட்டு வெட்டியவுடன் சம்பவ இடத்திலிருந்து ஓடிவந்துவிட்டதாகத்தான் எங்களிடம் சொன்னதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. எல்லாரும் வெட்டியதாகத்தான் சொன்னார். என்னுடைய புகாரில் என் தம்பியும் கவாஸ்கரும் இரவு சுமார் 10.30 மணிக்கு சென்றபோது என் தம்பிக்கு அருவாளால் தலையில் வெட்டியதை பார்த்தவுடன் அலறி அடித்துக்கொண்டு வீட்டிலிருந்த என்னிடம் தகவல் சொன்னான். உடனே நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. நான் முதன்முதலில் 29.02.2020 ம் தேதி விசாரித்தபோதும் போலிசாரிடம் தம்பியை இரண்டு வெட்டு வெட்டியவுடன் கவாஸ்கர் அலறி அடித்துக்கொண்டு

ஓடிவந்துவிட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. தமிழரசன் வாளை வைத்து என் தம்பியின் நெஞ்சில் வெட்டியதாகவும், மலைச்சாமி அருவாளை வைத்து நெற்றியிலும் இடது குதிகாலிலும் வெட்டியதாகவும், விக்னேஷ்வரன் வாளை வைத்து நெஞ்சில் குத்தியதாகவும், ரஞ்சித்குமார் முத்துசரவணன் வைத்திருந்த அருவாளை வாங்கி வலது தோள்பட்டையிலும் மணிக்கட்டிலும் வெட்டியதாகவும் விக்னேஷ்வரன் வைத்திருந்த வாளை வாங்கி சந்தனபாண்டி நெஞ்சில் குத்தியதாகவும் கவாஸ்கர் சொன்னார் என்று நான் கொடுத்த புகாரில் 29.02.2020ம் தேதி போலிசார் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என் தம்பியின் உடலை கைப்பற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் காலை மணி 8.30–8.45 இருக்கும். நாங்கள் ஈமக்காரியங்களை முடித்துவிட்டு 4,5 நாட்கள் கழித்து எங்கள் ஊரை சேர்ந்த பரத்வாஜ் மற்றும் நீதிஷ்குமார் இருவரும என் தம்பி போவதை வருவதை பார்த்து முத்துசரவணன் அவனது கூட்டாளிகளுக்கு தகவல் சொன்னதாகவும், புளியங்குடியை சேர்ந்த கூத்தப்பெருமாள் மகன் சுரேஷ் கண்ணன் என்ற சுரேஷ் குமார் அருவாள், வாள் உள்ளிட்ட ஆயுதங்களை சப்ளை செய்ததாகவும் ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டார்கள் என்று நான் போலிசார் என்னை முதன்முதலாக விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது டார்ச்லைட் எடுத்து சென்றேனா என்றால் இல்லை. என் தம்பி கல்யாண் ஜுவல்லரியில் ஏஜென்டாக வேலை பார்த்தானா என்றால் தெரியாது. எஸ்டி கொரியரில் வேலை பார்த்தானா என்றால் தெரியாது. என் தம்பி எஸ்டி கொரியரில் வேலை பார்த்தார் என்றும் அதன்பிறகு முத்தூர்

பைனான்ஸில் வேலை பார்த்தார் என்றும் என் தம்பி வேலை பார்த்த நிறுவனங்களில் பணம் கையாடல் மற்றும் பெண்களிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாக குற்றச்சாட்டுகள் ஏற்பட்டு அவனுக்கு பல விரோதிகள் இருந்தார்கள் என்றும் அதை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சொன்னபடி சொன்ன நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், பின்னிட்டு என் அம்மா மற்றும் என் சமூகத்தை சேர்ந்தவர்கள் தூண்டுதலின் பேரில் பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தம்பி தண்ணீர் பாய்ச்ச போனாதாக சொல்வது எல்லாம் பொய் என்றும் அவனுக்கு எப்படி எங்கு வைத்து காயம் ஏற்பட்டது என்பது தெரியாது என்றும் பின்னிட்டு இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)